தவிர மேலே நாடுகளில் "கமெர்ஷியல் ஸ்கேலில்" வியாபார ரீதியில் ஓட்டு வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஒரு வேளை மின்சக்தியால் ஓடும் ட்ராம்களை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகின்றார்களோ என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அமைச்சர் அவர்கள் இது மேலைநாடுகளில் ஆராய்ச்சி நிலையில்தான் இருக்கிறது என்று கூறுகின்றார்கள். ஆனால் மாஸ்கோவில் இப்படிப்பட்ட மின்சார பஸ்கள் ஏராளமாக ஓடுகின்றதை நானே பார்த்திருக்கின்றேன். எனவே அதுபற்றி ஆராயலாம். இடையிலே, இப்போது வண்டிகளிலிருந்து வெளிப்படும் புகையை ஃபில்ட்டர் செய்து அதைக் கேடற்றதாக்கி வெளியே விடுவதற்கான முறையை அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

Bus terminus at Mylapore

* 85 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals to shift the bus terminus from Kapaleeswarar temple tank to the P.S. High School playgrounds in Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்போது இந்த பஸ் டெர்மினசில் போதுமான இடமில்லை. பி.எஸ். உயர்நிலைப்பள்ளியில் உள்ள விளையாட்டுத் திடலில் இப்போது எக்ஸிபிஷன்தான் நடத்தப்படுகிறது. எனவே அந்தத்திடலில் ஒரு பக்கத்திலாவது இந்த பஸ் டெர்மினசை மாற்ற அரசு முன் வருமா? அப்படி ஒரு திட்டம் பரிசீலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போதைக்கு அந்தத் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]